சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 137/2017

பெயர் திருமதி. மாலா க /பெ. ஸ்ரீதர் நாள்.15.10.2024

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 1ம் பிரதிவாதி என் கணவரின் சகோதரர் என்றால் சரிதான். என் கணவருடன் உடன் பிறந்த சகோதரிகள் வசந்தி, கலாவதி, ஞானாம்பினை மற்றும் சுதா என்றால் சரிதான். அவர்கள் இவ்வழக்கின் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். என் கணவரின் பெற்றோர்கள் கந்தசாமி மற்றும் கிருஷ்ணவேணி. கந்தசாமியின் தகப்பனார் பெயர் சுந்தர கிராமணி என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் அனைத்தும் சுந்தர கிராமணியின் சொத்துக்கள் என்றால் சரிதான். அது அவரின் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். கந்தசாமியின் வாரிசுகளுக்கிடையே பாகம் பிரிக்கப்பட்டதா என்றால் செட்டில்மென்ட் மூலம் பாகம் பிரிக்கப்பட்டது. சுந்தர கிராமணி உயில் எழுதினார். ஆனால் உயில் எங்களிடம் இல்லை. சுந்தர கிராமணி 17.6.1954 தேதியில் உயில் எழுதினார் என்றாலும், அதன்படி அவருடைய சொத்துக்களை கந்தசாமி மற்றும் கிருஷ்ணவேணி ஆகியோர் தங்கள் ஆயுள் வரை அனுபவம் செய்து அதன் பின்னர் வாரிசுகள் அடையவேண்டும் என்று எழுதினார் என்றால் சரிதான். கந்தசாமி 10.12.1984 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். கிருஷ்ணவேணியம்மாள் 2001 ம் ஆண்டு இறந்துபோனார்.

2. நான், 1ம் பிரதிவாதி மற்றும் கந்தசாமியின் மகள்கள் அனைவரும் ஒன்றாக வழக்குச் சொததக்களை அனுபவம் செய்து வருகிறோம் என்றால் நாங்கள் மட்டும் தான் அனுபவம் செய்து வருகிறோம். அதற்கு ஆவணம் உண்டா என்றால் என் கணவருக்கு செட்டில்மென்ட் எழுதி கொடுக்கப்பட்டது. அந்த செட்டில்மென்ட் கந்தசாமியால் எழுதி பதிவு செய்யப்பட்டது. கந்தசாமி எழுதிக் கொடுத்த செட்டில்மென்ட் மூலமாகத்தான் வழக்குச் சொத்தில் நாங்கள் உரிமை

கோருகிறோம். மேற்கண்ட செட்டில்மென்ட் குறித்து வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றாலும், வழக்குச் சொத்து எங்களுக்கு உரிமையானது என்று அதிகாரம் கேட்கவில்லை என்றாலும் சரியல்ல.

3. நான் என்ன பரிகாரம் கோருகிறேன் என்றால் பாகம் கோருகிறேன். அவ்வாறு பாகம் கோரினால் என் கணவரின் சகோதரிகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்திருக்க வேண்டும் என்றால் அவர்களால் எங்களுக்கு பிரச்சனை ஏதும் இல்லை. என் கணவர், 1ம் பிரதிவாதி மற்றும் என் கணவரின் சகோதரிகள் அனைவரும் சேர்ந்து வழக்கில் அல்லாத வேறு சொத்துக்களை விற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. என் கணவர் இறந்தபிறகு 1ம் பிரதிவாதி மற்றும் என் கணவரின் சகோதரிகள் என்னை கட்டாயப்படுத்தி கிரய ஆவணத்தில் கையெழுத்து பெற்றுக் கொண்டார்கள். அவ்வாறு மூன்று கிரய ஆவணங்களில் நான் கையொப்பம் போட்டுக் கொடுத்துள்ளேன்.

4. மேற்கண்ட விவரங்களை வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் கணவரின் பாட்டனார் சுந்தர கிராமணிக்கு எவ்வளவு சொத்துக்கள் பாத்தியம் என்று எனக்கு தெரியாது. வேறு சொத்துக்கள் உள்ளதா என்று எனக்கு தெரியாது. வழக்குச் சொத்துக்களில் என் கணவரின் சகோதரரிகளுக்கு பாகம் உண்டு என்று சொன்னால் சரியல்ல. என் கணவருக்கு ஆறில் ஒரு பாகம் தான் உரிமை என்று சொன்னால் சரியல்ல. அதனால் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. மற்ற பாகஸ்தர்களை சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.